13.06.2024

அசல் வழக்கு எண்: 77/2014

பி.வா.சா.3 சாட்சி ஜெயபாலன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

எனது மனைவி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**16.09.1998ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது மனைவிக்கு கிரையம் கொடுத்த லலித்தா என்பவர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**31.10.1984ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

குருசாமி என்பவருக்கு பெத்தனன் என்பவர் எழுதிகொடுத்த பவர் பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**01.10.1984ம் தேதியிட்ட பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பெத்தனன் என்பவருடைய கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**11.05.1966ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது மனைவி அமுதவள்ளி பெயரில் உள்ள கணினி பட்டாவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**16.09.2020ம் தேதியிட்ட கணினி பட்டா பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது மனைவி அமுதவள்ளி பெயரில் உள்ள கிஸ்தி ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**07.03.2022ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது பி.வா.சா.ஆ.12 ஆகவும், 07.03.2022ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது பி.வா.சா.ஆ. 13 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)